தினமணி - 17.06.2017

டிஎன்பிஎல் ஆலை சார்பில்

# 47 மாணவர்களுக்கு ரூ.3.70 லட்சம் கல்வி உதவித்தொகை



மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையை வழங்குகிறார்கள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) வெங்கட ராமகிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) சுப்ரமணியன், பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் உள்ளிட்டோர்.

கரூர், ஜூன் 16: டிஎன்பிஎல் ஆலை சார்பில் 47 கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ. 3.70 லட்சம் வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அறக்கொடை அறக்கட்டளை சார்பில் காகித ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு, பொறியியல், மருத்துவம் படிக்கும் 47 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 3.70 லட்சம் வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகையை ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) வெங்கட ராமகிருஷ்ணன், முதன்மைப் பொது மேலாளர் (உற்பத்தி) சுப்ரமணியன் மற்றும் பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் ஆகியோர் பங்கேற்று 47 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையை வழங்கினர். கல்வி உதவித் தொகையை கல்லூரியில் நேரடியாக செலுத்திட ஏதுவாக அவரவர்கள் பயிலும் கல்லூரியின் பெயர்களிலேயே காசோலைகளாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் பங்கேற்றனர்.